வணக்கம்

ஆகாஷ்வாணி -புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 1.4.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

அடுத்த 10 ஆண்டுகளில், பொருளாதார தற்சார்பு நாடாக இந்தியா மேம்பட்டால் தான், உலகக் காரணிகளால் ஏற்படும் தாக்கங்களை தவிர்க்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

கச்சத் தீவு பிரச்சனையில் தமிழகத்தின் நலன்களை பாதுகாக்க, திமுக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இவ்வாண்டு மார்ச் மாதத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன் இன்று, பாரதியார் நினைவு அருங்காட்சியகம், மற்றும் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகத்தை, நேரில் சென்று பார்வையிட்டார்.

மோடி

அடுத்த 10 ஆண்டுகளில், பொருளாதார தற்சார்பு நாடாக இந்தியா மேம்பட்டால் தான், உலகக் காரணிகளால் ஏற்படும் தாக்கங்களை தவிர்க்க

முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று மும்பையில் ரிசர்வ் வங்கியின் 90-ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர் கடந்த 10 ஆண்டுகளில் அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாகவே, நாட்டின் கடன் வளர்ச்சி அதிகரித்து, வங்கித் துறை, லாபகரமான துறையாக மாறி இருப்பதாகத் தெரிவித்தார். பொது துறை வங்கிகளுக்கு புத்துயிர் அளிக்க அரசு, 3.5 லட்சம் கோடி ரூபாய் முதலீடு வழங்கி இருப்பதாக அவர் கூறினார். 2018-ஆம் ஆண்டில், 11.25 சதவிகிதமாக இருந்த வங்கிகளின் வாராக் கடன், கடந்த செப்டம்பரில், 3 சதவிகிதத்திற்கும் கீழான அளவில் குறைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். இந்த எல்லா சாதனைகளிலும் ரிசர்வ் வங்கிக்கு முக்கிய பங்கு இருப்பதாகவும், உலக அளவில், தொழில் முறைத் திறன் மற்றும் கடமைப் பற்றுக்கு பெயர் பெற்று திகழ்வது, இந்திய ரிசர்வ் வங்கி என்றும் பிரதமர் கூறினார். மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், பணப் புழக்கம் மற்றும் நிதி உறுதிப்பாட்டை பராமரித்து, வளர்ச்சியை தூண்ட, மரபு சார்ந்த மற்றும் சாராத பல்வேறு முறைகளை ரிசர்வ் வங்கி கடைபிடித்ததாக கூறினார். ரஷ்யா-உக்ரைன் போர்க்காலத்தில் பணவீக்கம் மற்றும் அந்நிய செலாவணி சந்தையின் ஏற்ற-இறக்கங்களை கட்டுப்படுத்துவதில், ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள் முக்கிய

பங்காற்றியதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் மத்திய வங்கி என்ற நிலையில் இருந்து, சந்தைப் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக ரிசர்வ் வங்கி தற்போது மேம்பட்டுள்ளதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் தமது உரையில் கூறினார். ரிசர்வ் வங்கியின் வளர்ச்சியும், இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தவை என்று அவர் குறிப்பிட்டார். மத்திய நிதி துறை இணை அமைச்சர்கள் திரு பகவத் கராட்-திரு பங்கஜ் சவுத்ரி, மகாராஷ்டிர முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, துணை முதலமைச்சர்கள் திரு தேவேந்திர பட்நவீஸ்-திரு அஜித் பவார் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

மோடி-கச்சத்தீவு

கச்சத் தீவு பிரச்சனையில் தமிழகத்தின் நலன்களை பாதுகாக்க திமுக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். கச்சத்தீவு விவகாரத்தில் புதிதாக வெளியாகும் தகவல்களால் திமுகவின் இரட்டை வேடம் கலைந்து இருப்பதாக சமூக வலைதள பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். கச்சத்தீவை இலங்கை அரசிடம் ஒப்படைக்க, 1974-ஆம் ஆண்டு, மத்தியில் அப்போதிருந்த காங்கிரஸ் அரசு முடிவு செய்த போது அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி தமிழகத்தின் அப்போதைய முதலமைச்சர் கருணாநிதியிடம் பேசியதாகவும், திமுகவின் பகிரங்க நிலைப்பாடுகளை

மீறி திரு கருணாநிதி மத்திய அரசின் முடிவை ஒப்புக் கொண்டதாகவும் ஊடகங்களில் தகவல் வெளியாகி இருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டி உள்ளார். காங்கிரஸ் திமுக இரண்டுமே குடும்பக் கட்சிகள் என்றும் தத்தம் வாரிசுகள் பற்றி தான் இக்கட்சிகளுக்கு அக்கறையே தவிர, ஏழை மீனவர்கள் மற்றும் மீனவப் பெண்கள் மீது அல்ல என்றும் அவர் கூறி உள்ளார். இதற்கிடையே, மூத்த பிஜேபி தலைவரும் வெளியுறவு அமைச்சருமான டாக்டர் ஜெய்சங்கர் புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் காங்கிரஸ்-திமுக இரண்டுமே, கச்சத்தீவு பிரச்சனையில் பொறுப்பற்ற முறையில் தான் நடந்து கொண்டுள்ளதாக குற்றம் சாட்டினார். 1974-ஆம் ஆண்டு கச்சத் தீவை இலங்கையிடம் தாரை வார்த்துக் கொடுத்த காங்கிரஸ்-திமுக கூட்டணி, 1976-ஆம் ஆண்டு மற்றொரு ஒப்பந்தம் மூலம், இந்திய மீனவர்களின் உரிமைகளை பலி கொடுத்து இருப்பதும், தற்போது அம்பலமாகி உள்ளதாக, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய இணை அமைச்சருமான டாக்டர் எல் முருகன் அறிக்கை ஒன்றில் கூறி உள்ளார்.

ஜிஎஸ்டி

இவ்வாண்டு மார்ச் மாதத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல் 1 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதாந்திர வசூலில், இதுவே 2-ஆவது மிகப் பெரிய அளவு என்றும் மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதையும் சேர்த்து கடந்த

நிதியாண்டின் சராசரி மாதாந்திர ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 68 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது. இது, அதற்கு முந்தைய நிதி ஆண்டில் 1 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது. திருப்பி அளிக்கப்பட்ட ஜிஎஸ்டி போக, நிகர ஜிஎஸ்டி வசூல், இவ்வாண்டு மார்ச் மாதத்தில், 1 லட்சத்து 65 ஆயிரம் கோடி ரூபாயாக பதிவாகி உள்ளது. இது கடந்த ஆண்டின் இதே கால கட்டத்தை விட, 18.4 சதவிகிதம் அதிகமாகும்.

கூட்டங்கள்

பாரத ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கை குழுக் கூட்டம், அதன் தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் தலைமையில், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. குழுவின் அமைப்பாளரும் மத்திய அமைச்சருமான திருமதி நிர்மலா சீதாராமன், இணை அமைப்பாளர் திரு பியூஷ் கோயல் உள்ளிட்டோர் அடங்கிய, இந்த 27 உறுப்பினர் குழுவின் முதலாவது கூட்டத்தில், வரவிருக்கும் மக்களவை தேர்தலுக்கான கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து விவாதிக்கப்பட்டது.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் கமிட்டியும் இன்று புதுடெல்லியில் கூடி, தெலங்கானா மாநிலத்திற்கான காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வது குறித்து விவாதித்தது. கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் திருமதி

சோனியாகாந்தி, தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி உள்ளிட்டோர், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*ராதாகிருஷ்ணன்*

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன் இன்று, மகாகவி பாரதியார் நினைவு அருங்காட்சியகம் மற்றும் ஆய்வு மையத்தை பார்வையிட்டார். அருங்காட்சியகத்தில் உள்ள பாரதியார் மற்றும் செல்லம்மாள் திருவுருவுப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் எழுதியப் படைப்புகளை, தனியாக பட்டியலிட்டு, தொகுத்து வைக்குமாறு, துணை நிலை ஆளுநர், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். பாரதியாரும், பாரதிதாசனாரும் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் சேர்ந்து எடுக்கப்பட்ட புகைப் படங்களை, விளம்பரம் கொடுத்து சேகரிக்கவும், புதுச்சேரியில் பாரதியார் நடத்திய இந்தியா பத்திரிக்கையின் நினைவாக, அதே பெயரில் மாத இதழ் ஒன்றை கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார். பாரதியார் நினைவு அருங்காட்சியகத்தில் இருந்து நடை பயணமாகவே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகத்திற்கு வந்து சேர்ந்த துணை நிலை ஆளுநர் அங்குள்ள பாரதிதாசன் சிலைக்கும் படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, விடுதலைப் போராட்ட வீரர்கள் சுப்பையா-சரஸ்வதி நினைவு இல்லத்தையும் அவர் பார்வையிட்டு அவர்களின் சிலைக்கு மலர் தூவி

மரியாதை செலுத்தினார். பின்னர் துணை நிலை ஆளுநர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மகத்தான மனிதர்கள் வாழ்ந்த பூமி, புதுச்சேரி என்றும், பாரதி மற்றும் பாரதிதாசன் எழுத்துக்களை டிஜிட்டல் முறையில் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார். புதுச்சேரி அரசு மற்றும் தமிழக அரசின் சுற்றுலாத் துறைகள் மூலமாக புதுச்சேரி வருகின்ற அனைவரும் இந்த நினைவு இல்லங்களுக்கு வருவதை உறுதிப்படுத்த, எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கலை-பண்பாட்டுத் துறை செயலர் திரு நெடுஞ்செழியன், துறையின் இயக்குநர் திரு கலியபெருமாள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

ஸ்வீப்

முறையான வாக்காளர் கல்வி மற்றும் வாக்காளர் பங்கேற்பிற்கான ஸ்வீப் திட்டத்தின் கீழ், புதுச்சேரியில், முதல் முறையாக வாக்களிக்க உள்ள கல்லூரி மாணவர்களுக்கான வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி, அரியூர் வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரியில் இன்று நடைபெற்றது. புதுச்சேரி தெற்கு மாவட்ட சார்பு ஆட்சியர் திரு சோமசேகர் அப்பாராவ் கொட்டாரு இந்நிகழ்ச்சியை தொடக்கி வைத்துப் பேசுகையில், மாணவ-மாணவியர் தவறாது வாக்களிக்க வேண்டும் என்றும், தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல்களை சி-விஜில் செயலி மூலம் தெரியப்படுத்தலாம் என்றும் கூறினார். வாக்காளர் விழிப்புணர்வு குறித்து மாவட்ட தேர்தல்

அதிகாரி அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள குறும்படம், இந்நிகழ்ச்சியின் போது திரையிடப்பட்டது. தேர்தல் தொடர்பான நல்ல கருத்துக்களை மாணவர்கள் தங்களின் சமூக வலைதளப் பக்கங்களில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையின் இயக்குநரும், உதவி மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு செந்தில்குமார், கல்லூரி முதல்வர் டாக்டர் பிரதீப் தேவநேயன் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரியின் வாக்காளர் கல்விப் பிரிவு நோடல் அதிகாரி திரு பிரதீப் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

*பிஐபி*

மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் முதன்மை தலைமை இயக்குநராக, மூத்த-இந்தியத் தகவல் பணி அதிகாரி திருமதி ஷெஃபாலி சரண் இன்று பொறுப்பேற்றுள்ளார். இதுவரை இப்பதவியில் இருந்த திரு மனீஷ் தேசாய் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, பொறுப்பு திருமதி ஷெஃபாலியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முன்னதாக நிதி அமைச்சகம் மற்றும் தேர்தல் ஆணையத்திலும் திருமதி ஷெஃபாலி சரண் பணியாற்றி உள்ளார்.

*ஆணையம் எச்சரிக்கை*

பெண்களுக்கு எதிராக அவதூறு கருத்துக்களை வெளியிட்டதற்காக பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு திலிப் கோஷ், மூத்த காங்கிரஸ்

தலைவர் திருமதி சுப்ரியா ஸ்ரீநாதே ஆகியோரை தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது. மேற்குவங்க முதலமைச்சர் திருமதி மம்தா பேனர்ஜிக்கு எதிராக திரு திலிப் கோஷ் பேசியதையும், மக்களவை தேர்தலுக்கான பிஜேபி வேட்பாளர் திருமதி கங்கனா ராவத்திற்கு எதிராக திருமதி சுப்ரியா ஸ்ரீநாதே பேசியதையும் ஆணையம் கண்டித்து, தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் அமலில் இருப்பதால் திரு கோஷ், திருமதி ஸ்ரீநாத் ஆகியோர் பொது வாழ்வில் கவனமாக செயல்பட வேண்டும் என்று கூறி உள்ளது. இவர்கள் தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக விமர்சனம் வெளியிட்டதன் மூலம் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகளை மீறி இருப்பதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*ராகுல்காந்தி*

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் மத்திய ஏஜன்சியின் உதவி இல்லாமல் மக்களவை தேர்தலில் பிஜேபி வெற்றி பெற முடியாது என்று மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி நேற்று பிரச்சாரத்தில் பேசியதை ஆட்சேபித்து, பாரதிய ஜனதா கட்சி தேர்தல் ஆணையத்தை அணுகி உள்ளது. மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ஹர்தீப் சிங் புரி தலைமையிலான பாரதிய ஜனதா பிரதிநிதிக் குழுவினர் இன்று இப்பிரச்சனையை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த பின்னர் புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் திரு ராகுல்காந்தி மட்டரக அரசியலில் ஈடுபடுவதாக கூறினர். தேர்தலில்

தோற்றுவிடுவோம் என்பதை தெரிந்து கொண்டு தான் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சித் தலைவர்கள் இப்படி பேசுவதாக மற்றொரு மூத்த பிஜேபி தலைவர் திரு அர்ஜுன்சிங் கூறினார்.

*கிரிக்கெட்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு மும்பையில் நடைபெறும் போட்டியில், மும்பை-ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. டெல்லி-சென்னை அணிகளுக்கு இடையிலும், ஐதராபாத்-குஜராத் அணிகளுக்கு இடையிலும், முறையே விசாகப் பட்டிணம், மற்றும், அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற 2 போட்டிகளில், டெல்லி அணி, 20 ரன் வித்தியாசத்திலும், குஜராத் அணி, 7 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன.

*தொழில் நுட்பம்*

செயற்கை நுண்ணறிவு, ஜிபிஎஸ் போன்ற நவீன தொழில் நுட்பங்களால் பலன்கள் அதிகம் என்றாலும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் ஏற்படுவதை அனைவரும் புரிந்து கொண்டு செயல்படுதல் அவசியம் என்று, மத்திய உள்துறை செயலர் திரு ஏகே பல்லா கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், சிவில் விமான சேவைகள் கழகத்தின் 38-ஆவது உதய நாள் விழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு வலியுறுத்தினார். தொழில் நுட்பம் சார்ந்த ஒவ்வொரு துறையினரும், தொழில் நுட்பத்தின் வளர்ச்சியை உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் புதிய

தொழில்நுட்பங்களால் ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். இந்தியாவின் சிவில் விமான போக்குவரத்து துறை வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாகவும், நடப்பாண்டின் வளர்ச்சி சாதனை அளவை எட்டும் என்றும் திரு ஏ கே பல்லா தெரிவித்தார். போக்குவரத்து அதிகரிப்பதால் பாதுகாப்பு அம்சங்கள் நீர்த்துப் போய்விடக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

*எல்பிஜி-விலை*

வர்த்தக தேவைகளுக்கான 19 கிலோ எல்பிஜி சிலிண்டர் விலையை, எண்ணெய் நிறுவனங்கள் குறைத்து அறிவித்துள்ளன. பல்வேறு நகரங்களில் விலை குறைப்பு, சிலிண்டருக்கு 30 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை உள்ளது. விலை குறைப்பைத் தொடர்ந்து சென்னையில் 19 கிலோ எல்பிஜி சிலிண்டர் விலை, ஆயிரத்து 930 ரூபாயாகவும், டெல்லியில், ஆயிரத்து 764 ரூபாயாகவும் இருக்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

*கெஜரிவால்*

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை தொடர்பான வழக்கில் அமலாக்கத் துறையினரால் கடந்த மார்ச் 21-ஆம் தேதி கைது செய்யப்பட்ட டெல்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜரிவாலுக்கு டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றம், வரும் 15-ஆம் தேதி வரை நீதிமன்றக் காவல் விதித்துள்ளது. ஏற்கனவே விதிக்கப்பட்ட காவல் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து

அமலாக்க துறை அதிகாரிகள் இன்று அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, சிறப்பு சிபிஐ நீதிபதி காவேரி பவேஜா இவ்வாறு உத்தரவிட்டார். முன்னதாக கடந்த 22-ஆம் தேதி விசாரணை நீதிமன்றம் திரு அரவிந்த் கெஜரிவாலை, 6 நாள் அமலாக்கத் துறை காவலில் வைத்து, பின்னர் அதை மேலும் 4 நாட்களுக்கு நீட்டித்தது.

ஒடிசா

இன்று ஒடிசா மாநிலத்தின் உதய நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர், அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். ஏராளமான இயற்கை ஆதாரங்கள் வளமான கலாச்சார மரபுகள், நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய மக்களுக்கு புகழ்பெற்ற மாநிலம் ஒடிசா என்றும், நாட்டின் வளர்ச்சியில் ஒடிசா மாநிலத்தின் பங்களிப்பு முக்கியமானது என்றும் குடியரசு தலைவர் கூறி உள்ளார். பழங்கால கோவில்கள் முதல் நவீன காலத்தின் புதுமைகள் வரை அனைத்தும் அடங்கிய ஒடிசா மாநிலத்தின் கலாச்சாரமும் முன்னேற்றமும் அனைவரையும் கவரக் கூடியவை என்று குடியரசு துணைத் தலைவர் கூறி உள்ளார். ஒடிசாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தையும் துடிப்பான மக்களையும் நமக்கு நினைவூட்டும் நாள், இது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். நாட்டின் வளர்ச்சியில்

முக்கிய பங்காற்றி உள்ள ஒடிசா மாநிலமும் மக்களும் மென்மேலும் வளர்ச்சி அடைய தாம் வாழ்த்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

அடுத்த 10 ஆண்டுகளில், பொருளாதார தற்சார்பு நாடாக இந்தியா மேம்பட்டால் தான், உலகக் காரணிகளால் ஏற்படும் தாக்கங்களை தவிர்க்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

கச்சத் தீவு பிரச்சனையில் தமிழகத்தின் நலன்களை பாதுகாக்க, திமுக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இவ்வாண்டு மார்ச் மாதத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன் இன்று, பாரதியார் நினைவு அருங்காட்சியகம், மற்றும் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகத்தை, நேரில் சென்று பார்வையிட்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 1.4.2024/Script.